**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 4.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்து துறையில் பெண்களின் முன்னேற்றம் வலுவடைந்து இருப்பதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பாராட்டி உள்ளார்.

- பொது நிர்வாகத்தில் உள்ள அனைவரும், தேசிய மாண்புகளுக்கும், முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் பணிகளுக்கும் முக்கியத் துவம் அளிக்க வேண்டுமென குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார்.
- புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று மாற்றுத் திறனாளிகளுக்கான உயர்த்தப்பட்ட உதவித் தொகையை பயனாளிகளுக்கு வழங்கினார்.
- புதுச்சேரியில் சாலையோர ஆக்கிரமிப்புகளையும், அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள பேனர்கள் மற்றும் கட்-அவுட்டுக்களையும் அகற்றும் பணிகள், நகரப் பகுதியில் இருந்து, இன்று தொடங்கி உள்ளன.

*<u>முர்மு-மகளிர்</u>*

இந்தியாவில் வான் போக்குவரத்து துறையில் சாதனை படைத்த பெண்களின் குழு ஒன்றை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார். மக்களுடன் குடியரசு தலைவர் முன்முயற்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த சந்திப்பில் குடியரசு தலைவர்

பேசுகையில், இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்து துறையில் 15 சதவிகித போக்குவரத்து கட்டுப்பாட்டு அலுவலர்களும், 9 சதவிகித பொறியாளர்களும் பெண்கள் என்றார். கடந்த ஆண்டு பைலட் உரிமம் பெற்றவர்களில் 18 சதவிகிதம் பெண்கள் என்றும், அனைவரையும் உள்ளடக்கிய அரசின் அணுகுமுறை காரணமாகவே, சிவில் விமானப் போக்குவரத்து துறையில் பெண்களின் முன்னேற்றம் வலுவடைந்து இருப்பதாகவும் அவர் கூறினார்.

<u>தன்கர்</u>

பொது நிர்வாகத்தில் உள்ள அனைவரும், தேசிய மாண்புகளுக்கும், ஒற்றுமையான, முன்னேறிய இந்தியா ஒன்றை உருவாக்கும் பணிகளுக்கும் முக்கியத் துவம் அளித்து, அச்சமோ, பக்கச் சார்போ இன்றி, அனைத்து மக்களுக்கும் சேவை புரிய வேண்டுமென குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் இந்திய பொது நிர்வாகக் கழகத்தின், 70-ஆம் ஆண்டு பொதுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இந்திய கலாச்சாரத்திற்கே அஸ்திவாரமாக திகழும் நன்னெறிகளின் அடிப்படையிலான தலைமைப் பண்புடன் அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்றார். நலிவடைந்த பிரிவினர் மற்றும் விளிம்பு நிலை மக்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளத் தேவையான மென்திறன்கள், உணர்வுப் பூர்வ அறிவு மற்றும் கலாச்சாரத் திறன்களை அதிகாரிகள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்திக் கொள்ளும் அதேவேளை, தொழில் நுட்பங்களின் பயன்பாட்டினால் சமூகத்தில் பிளவு அதிகரிப்பதை அனுமதிக்க கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார். காலனி ஆதிக்க கால மனோபாவத்தை நாடு வேகமாக உதறி வருவதாகவும், பழைய கிரிமினல் சட்டங்களுக்கு பதிலாக 3 புதிய குற்றவியல் சட்டங்கள் கொண்டு வரப்பட்டதே இதற்கு சான்றாகும் என்றும் குடியரசு துணைத் தலைவர் கூறினார். நவீன உலகில்,

தரவுகள் தான் வலுவான அஸ்திவாரமாக திகழ்வதாக தெரிவித்த அவர் தரவுகளை வைத்தே, கட்டுக்கதைகள் மீதான நம்பிக்கையை மக்கள் கைவிட்டு, உண்மை நிலவரங்களை புரிந்து கொள்ள முடியும் என்பதால், மக்கள் நலனை மையமாகக் கொண்ட எந்த ஒரு அரசுக்கும் தரவுகள் மிக முக்கியம் என்றார்.

பொது நிர்வாகக் கல்வியில் சிறந்து விளங்கியவர்களுக்கான டாக்டர் ராஜேந்திர பிரசாத் விருது, பால் ஆப்பிள்பி விருது உட்பட பல்வேறு விருதுகளையும், குடியரசு துணைத் தலைவர் இந்நிகழ்ச்சியின் போது வழங்கிச் சிறப்பித்தார்.

<u>மோடி-ஜார்கண்ட்</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, ஜார்கண்ட் மாநிலம் கர்வா, சாய்பாசா ஆகிய இடங்களில் பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார். ஜார்கண்டில் உள்ள ஹேமந்த் சோரேன் அரசு, 5 ஆண்டுகளாக மக்களை ஏமாற்றி வருவதாகவும், ஜார்கண்ட் முக்தி மோர்சா, காங்கிரஸ், ஆர்ஜேடி ஆகிய கட்சிகள் பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். ஆதிவாசிகளின் அதிகாரப் பங்கேற்பை மத்திய அரசு மேம்படுத்தி வரும் நிலையில் ஜார்கண்டில் உள்ள ஹேமந்த் சோரேன் அரசு ஆதிவாசிகளை அவமதிப்பதாக அவர் கூறினார். மத்தியிலும், மாநித்திலும் இரட்டை எஞ்சின் அரசுகள் அமைய ஏதுவாக, ஜார்கண்ட் மக்கள், சட்டமன்ற தேர்தலில் பாரதிய ஜனதாவிற்கு வாக்களிக்க வேண்டும் என பிரதமர் கேட்டுக் கொண்டார். ஜார்கண்டின் பாதுகாப்பு, வளம் மற்றும் ஸ்திரத்தன்மைக்கான உத்தரவாதத்துடன், பிஜேபி, தேர்தல் களத்தில் இறங்கி இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

*<u>உத்தராகண்ட்-விபத்து</u>*

உத்தராகண்டில் அல்மோரா மாவட்டம் சல்ட் பகுதியில் இன்று காலை, பேருந்து 100 மீட்டர் பள்ளத்தில் விழுந்து கவிழ்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் 36 பேர் உயிர் இழந்தனர். மேலும் 19 பேர் காயம் அடைந்தனர். விபத்து குறித்து தகவல் கிடைத்த உடன் மத்திய-மாநில பேரிடர் மீட்புப் படையினர், போலீசார் மற்றும் உள்ளூர் நிர்வாகத்தினர் விரைந்து வந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். விபத்தில் பல உயிர்கள் பலியானது குறித்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, உத்தராகண்ட் ஆளுநர் திரு குர்மித் சிங், முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி ஆகியோர் துயரம் வெளியிட்டு உள்ளனர். விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து, தலா 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகை அறிவித்துள்ளார். காயம் அடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

*<u>க□□ா</u>*

கனடாவின் பிராம்ப்டன் நகரில் நேற்று, தீவிரவாதிகள் மற்றும் பிரிவினை வாதிகளால் இந்து சபா கோவில் தாக்கப்பட்டதை இந்தியா கண்டித்துள்ளது. கனடாவில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்தும் இந்தியா, ஆழ்ந்த கவலை வெளியிட்டு உள்ளது. கனடாவில் உள்ள அனைத்து வழிபாட்டு தலங்களும் இத்தகைய தாக்கதல்களில் இருந்து பாதுகாக்கப்படுவதை, கனடா அரசு உறுதிப்படுத்த வேண்டுமென, வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு ரண்தீர் ஜெய்ஸ்வால் கேட்டுக் கொண்டுள்ளார். வன்முறையில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென இந்தியா எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறி உள்ளார். இதற்கிடையே, இந்திய தூதரகத்தின் பிராம்ப்டன் முகாம் அலுவலகத்திற்கு வெளியிலும், இந்திய விரோத சக்திகள் வன்முறையில் ஈடுபட்டது குறித்து, ஒட்டாவா நகரில் உள்ள இந்திய தூதரகம் கவலை

வெளியிட்டுள்ளது. இத்தகைய வன்முறை மற்றும் அச்சுறுத்தல்களால், இந்திய தூதரக அதிகாரிகள் இந்தியர்களைப் போலவே கனடா மக்களையும் தேடிச் சென்று சேவை புரிவதில் பின் வாங்க மாட்டார்கள் என்று திரு ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

கனடா பிரதமர் திரு ட்ரூடோ, அற்ப அரசியலுக்காக அங்குள்ள இந்திய சமூகத்தினரை பிளவுபடுத்துவதாக மத்திய அமைச்சர் திரு ரவுனீத் சிங் பிட்டு கண்டனம் வெளியிட்டுள்ளார். சீக்கியர்களும், இந்துக்களும் இந்தியாவில் இணக்கமாக வாழ்ந்து வரும் நிலையில் கனடாவில் இரு சமூகத்தினரும் ஒருவருக்கொருவர் எதிர் நிலையில் நிறுத்தப்படுவதாக சமூக ஊடகத்தில் அவர் கூறி உள்ளார்.

***ரங்கசாமி-உதவித் தொகை***

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று மாற்றுத் திறனாளிகளுக்கான உயர்த்தப்பட்ட உதவித் தொகையை பயனாளிகளுக்கு வழங்கினார். சட்டமன்றத்தில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது, சமூக நலத்துறை அமைச்சர் திரு ஜெயக்குமார் உடன் இருந்தார். மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை ஆயிரம் ரூபாய் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, உடல் ஊனத்தின் அளவு மற்றும் வயது அடிப்படையில் இதுவரை 2 ஆயிரம் ரூபாய், 2 ஆயிரத்து 500 ரூபாய், 2 ஆயிரத்து 700 ரூபாய், 3 ஆயிரத்து 500 ரூபாய், மற்றும் 3 ஆயிரத்து 800 ரூபாய் பெற்று வந்தவர்கள், இனி, முறையே, 3 ஆயிரம் ரூபாய், 3 ஆயிரத்து 500 ரூபாய், 3 ஆயிரத்து 700 ரூபாய், 4 ஆயிரத்து 500 ரூபாய் மற்றும் 4 ஆயிரத்து 800 ரூபாய் பெறுவார்கள் என்று அரசு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனால் புதுச்சேரியின் அனைத்து 4 பகுதிகளிலும் மொத்தம் 21 ஆயிரத்து 329 பேர் பயன் பெறுவார்கள். அரசுக்கு ஆண்டுக்கு, 25.39 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

*ரங்கசாமி-அடிக்கல்*

பிரதமரின் மீனவர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதுச்சேரி வீராம்பட்டினம் மீனவர் கிராமத்தில், 53 கோடி ரூபாய் செலவில், தேங்காய்திட்டு-அரிக்கமேடு மீன்பிடி துறைமுகத்திற்கான கட்டுமான மற்றும் விரிவாக்க பணிகளுக்கு, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி i பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டினார். மீனவர்களின் வாழ்வாதாரமான முகத் துவாரப் பகுதியை உடனடியாக தூர் வார வேண்டும் என, நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மீனவர்கள் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர். இதற்கான பணிகளை உடனடியாக தொடங்க உள்ளதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

*ஆக்கிரமிப்பு*

புதுச்சேரியில் சாலையோர ஆக்கிரமிப்புகளையும், அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள பேனர்கள் மற்றும் கட்-அவுட்டுக்களையும் அகற்றும் பணிகள் வரும் 29-ஆம் தேதி வரை மேற்கொள்ளப்பட உள்ளன. மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் உத்தரவின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இந்த இயக்கத்தின் முதல் நாளான இன்று, நேரு வீதி, காந்தி வீதி, மிஷன் வீதி, உள்ளிட்ட நகரப் பகுதிகளில், பொதுப் பணித் துறை மற்றும் நகராட்சி ஊழியர்கள், நூற்றுக் கணக்கான போலீசாருடன் இணைந்து, லாரி மற்றும் பொக்லைன் இயந்திரங்கள் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள் இடையே பரபரப்பு நிலவியது.

சு□ாமி-ஒத்திகை

2004-ஆம் ஆண்டு சுனாமி தாக்குதலின் 20-ஆம் ஆண்டை ஒட்டி, காரைக்கால் மாவட்ட நிர்வாகம் நாளை காலை 9.30 மணி முதல், பிற்பகல் 1.30 மணி வரை கோட்டுச்சேரி பகுதியில், சுனாமி ஒத்திகைக்கு ஏற்பாடு செய்துள்ளது. சுனாமி ஏற்பட்டால், பாதிப்பு ஏற்படாத வகையில் எப்படி செயல்பட வேண்டும் என்பது குறித்த இந்த ஒத்திகையில் சம்பந்தப்பட்ட அனைத்து துறையினரும் பங்கேற்க உள்ளனர். இது ஒத்திகை தான் என்பதால் பொது மக்கள் அச்சப்பட வேண்டாம் என்றும் காரைக்கால் மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

தேர்தல்-மாற்றம்

கேரளா, பஞ்சாப் மற்றும் உத்தரபிரதேசத்திற்கு உட்பட்ட 14 சட்டமன்ற தொகுதிகளுக்கு, வரும் 13-ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த இடைத் தேர்தல், 20-ஆம் தேதி நடைபெறும் என, தேர்தல் ஆணையம் இன்று அறிவித்துள்ளது. இந்த 14 சட்டமன்ற தொகுதிகளில், கேரள மாநிலம் பாலக்காடு, பஞ்சாப் மாநிலம் சப்பேவால், உத்தரபிரதேஷ் மாநிலம் காசியாபாத் உள்ளிட்ட தொகுதிகள் அடங்கும். வரும் 13-ஆம் தேதி பெரிய அளவிலான சமூக, கலாச்சாரம் மற்றும் மத நிகழ்ச்சிகள் இருப்பதால், இடைத் தேர்தல் தேதியை மாற்ற வேண்டும் என, பிஜேபி, காங்கிரஸ், பகுஜன் சமாஜ் உள்ளிட்ட கட்சிகளும், பல்வேறு சமூக அமைப்புகளும் விடுத்த கோரிக்கை அடிப்படையில் தேர்தல் ஆணையம் இவ்வாறு முடிவு செய்துள்ளது. ஆயினும் இத்தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை, வரும் 23-ஆம் தேதி நடைபெறும் என்பதில் மாற்றமில்லை.

**ரயில்வே**

கடந்த மாதம் 1-ஆம் தேதி முதல் வரும் 30-ஆம் தேதி வரையிலான பண்டிகை காலத்தில் பயணிகள் நெரிசலை சமாளிக்கும் வகையில் நாடு முழுவதும் மொத்தம் 7 ஆயிரம் சிறப்பு ரயில்களை ரயில்வே துறை இயக்குகிறது. இதன் ஒரு பகுதியாக சத் பூஜா திருநாளை ஒட்டி, இன்றைய தினம் 185 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாகவும், டெல்லியில் இருந்து நாட்டின் பல்வேறு நகரங்களுக்கு இயக்கப்படும் 25 சிறப்பு ரயில்கள் இதில் அடங்கும் என்றும் ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நாள் ஒன்றுக்கு சுமார் 2 லட்சம் கூடுதல் பயணிகளை கையாள சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் நடப்பு பண்டிகை காலத்தில் மொத்தம் 1 கோடிக்கும் மேற்பட்ட பயணிகளை ரயில்வே துறை கையாளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஜெம்**

மத்திய அரசுத் துறைகள் மற்றும் அலுவலகங்களுக்கு பொருள் வாங்குவதற்கான ஜெம் இணையதளத்தில், வேளாண்துறை மற்றும் தோட்டக்கலை துறையினருக்கு தேவையான 170 விதை ரகங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதையும் சேர்த்து சுமார் 8 ஆயிரம் விதை ரகங்களை மத்திய-மாநில அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் வாங்கி, வரவிருக்கும் சாகுபடி பருவத்தின் போது விவசாயிகளுக்கு விநியோகிக்கலாம் என்று, சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வேளாண் ஆராய்ச்சி அமைப்புகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் ஆலோசனை அடிப்படையில் விதை ரகங்கள் சேர்க்கப் பட்டுள்ளதாகவும், ஜெம் இணையதளத்தில் முற்றிலும் அரசு விதிமுறைகளைப் பின்பற்றி விதை ரகங்கள் விற்கப்படுவதால் கொள்முதல் பணிகள் எளிமையாகும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.